துவரங்குறிச்சிப் பகுதியில் தென்னை நார்த் தொழில்.

583—(*வினா எண். 5952)—திரு. க. சோலைராசு : மாண்புமிகு ஊரகத்தொழிற்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

துவரங்குறிச்சி பகுதியில் தென்னை நாரிலிருந்து கார்பெட், கால்மிதியடி போன்றவைகள் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க அரசிடம் உத்தேசம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன் : இல்லை.

விளாத்திகுளம் தொகுதியில் தீப்பெட்டித் தொழில்.

584—(*வினா எண். 7851)—திரு. ச. குமாரகுருபர ராமநாதன்: மாண்புமிகு ஊரகத் தொழிற்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விளாத்திகுளம் தொகுதியிலுள்ள ''சிறுதொழில் தீப்பெட்டி உற்பத்தியாளர் சங்கம்'' நசிந்து போயுள்ளதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், தொழிற்சாலைகளை நடத்த அரசு உதவி செய்யும் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா ?

மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன் : (அ) ஆம்.

(ஆ) தமிழ்நாட்டில் உள்ள அனைத்து சிறு தீப்பெட்டி உற்பத்தியாளர் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் சில பொதுவான காரணங்களால் இலாபமாகச் செயல்பட இயலாத நிலையில் உள்ளன. இந்தச் சங்கங்கள் இலாபகரமாக இயங்கும்பொருட்டு மற்றைய சிறு தீப்பெட்டி தயாரிப்பாளர்கள் பொது லேபில்கள் உபயோகிப்பதை தடுத்து, தீப்பெட்டித் தொழிற் சங்கங்கள் மட்டும் பொது லேபில்கள் பயன்படுத்த அனுமதிக்கும்படி மைய அரசுக்கு இந்த அரசு பரிந்துரை செய்துள்ளது. மைய அரசு இந்தச் சலுகையை வழங்கினால் இந்தச் சங்கங்கள் இலாபகரமாக நிச்சயம் நடக்கும்.

(முற்பகல் 10.00).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதியுடன் வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப் பெறுகிறது.

திரு. ஆர். ரெங்கசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுத் தீப்பெட்டி உற்பத்திச் சங்கங்கள் பொதுவாக நஷ்டத்தில் இயங்குகின்றன. சாத்தூர், சிவகாசி, விளாத்தி